**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC )

| | |
|---|---|
| Case No. | : CC No. 80/2013 |
| Deposition of witness for Prosecution | : P.W– 9 |
| Name | : சீனிவாசன், வயது 74 |
| Father Name/Husband Name | : ராமசுப்பு |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : வேலை இல்லை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of April 2026.

**(A4 presnet. A1, A2, A3 absent. 317 CrPC petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. ஆஜர் இல்லாத எதிரிகளை எனக்கு தெரியாது. நான் கடந்த 2003 ஆம் வருடம் விவேக் சுரானா பைனான்ஸில் ஏஜெண்டாக வேலை பார்த்தேன். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

3. கடந்த 18.02.2009 ஆம் தேதி நான் விவேக் சுரனாவின் பைனான்ஸ ஏஜெண்ட்டாக இருந்தபோது, நான் Scropio கருப்பு கலர் காரை KA 02 MC 7309 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை 1வது எதிரி அக்ஷய ராமானுஜம் ரூ. 4,00,000 லட்சம் என்று விலைக்கு என்னிடம் சொன்னதாகவும், அந்த வாகனத்தை ரூ. 100 அட்வான்ஸ் தொகையாக கொடுத்துவிட்டு வண்டியை டெலிவரிக்கு எடுத்து கொடுத்தேன் என்றும், பின்னர் எதிரி அக்ஷய ராமானுஜமும் ஸ்ரீசக்தி ஆட்டோ கன்சல்டிங் ஏஜென்ஸிஸ் நிறுவனத்தில் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றும், அதில் 1வது எதிரி அக்ஷய ராமானுஜமும், வெள்ளைத்துரை

என்பவரும் கையொப்பம் செய்து கொண்டார்கள் என்றும், பின்னர் கோவில்பட்டி, பங்களா தெருவினைச் சேர்ந்த கலை செல்வன் மகன் ராஜேஸ்பாண்டியன், முருகன், அழகர் ராமானுஜமும் இந்த ஒப்பந்ததிற்கு உடன் இருந்து சாட்சியாகவும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

4. பின்னர் இந்த வாகனத்தின் பதிவெண் கர்நாடக மாநில பதிவெண்ணாக உள்ளது என்றும், அதனை தமிழ்நாடு பதிவெண்ணாக மாற்றி கொடுக்கிறீர்களா அப்போதுதான் மீதி பணத்தை கொடுப்பார்கள் என்று அக்ஷய ராமானுஜத்திடம் கூறினேன் என்றும், அதன் பின்பு 30.03.2010 ஆம் தேதி அவர் பெயரிலிருந்து என் பெயருக்கு மாற்றி கொடுத்துவிட்டார் என்றும், அதன் பின்பு ஒரு மாதம் கழித்து வாகனத்தை வாங்கிய நபர் வாகனத்திற்கு உண்டான எல்லா பணத்தையும் 1வது எதிரி அக்ஷய ராமானுஜத்திடம் கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல.

5. அதன் பின்பு மேற்படி வாகனத்தின் ஆவணங்கள் அனைத்தும் போலியானவை என்றும், மாருதி 800 காரின் பதிவெண்ணை காண்பித்து அக்ஷய ராமானுஜம் மோசடியாக மறுபதிவு செய்துள்ளார் என்பதை அறிந்து மேற்படி வாகனமான Scropio காரை அவரிடமே வாங்கிய நபர் கொடுத்துவிட்டு இந்த திருட்டு வண்டி எனக்கு வேண்டாம் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று அவரிடம் கூறிவிட்டு அதன்பின்பு கோவில்பட்டி RTO திரு. சத்தியமூர்த்தி அவர்கள் மேற்படி தேதியில் 1வது எதிரி அக்ஷய ராமானுஜத்திடமிருந்து மேற்படி Scropio காரை கைப்பற்றி அதை கிழக்கு காவல் நிலையத்தில் ஒப்படைத்து மேற்படி RTO சத்தியமூர்த்தி அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து வாகனம் சம்பந்தமான அனைத்து விவரங்களையும் போலீசாரிடம் நான் கூறியுள்ளேன் என்றும், எதிரி அக்ஷய ராமானுஜத்தின் கூட்டாளிகள் அனைவரும் எனக்கு தெரியும் என்றும், இவ்வாறு போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.